தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1969 மார்ச் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-13 அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நடைமுறைக் கேள்வி

பேரவை குறித்த நேரத்தில் கூடாததும், அமைச்சர்கள் தாமதமாக பேரவைக்கு வருதலும்.

THIRU K. VINAYAKAM: Sir, I rise on a point of order. Yesterday, you have been kind enough to adjourn this House to Meet again at 9 O' clock this morning. But, it is almost 9-15 a.m., now. We have not constituted this House properly at the specified hour, namely 9 a.m., with you Mr. Speaker at the Chair and the House has met late by 15 minutes. May I know the unusual reason for such kind of delay in constituting the House at the specified hour. Whatever may be the causes—may be after all, they are beyond human control—will the Hon. Speaker assure us that this will not happen in future?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விநாயகம் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு இப்படிப்பட்ட நிகழ்ச்சி இனிமேல் நடைபெறாது என்று உறுதி கூறுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், அதுமட்டுமல்ல. தினந்தோறும் சில அமைச்சர்களைத் தவிர மற்ற அமைச்சர்கள் காலம் கடந்து வரக் கூடிய நிலைமை இருக்கிறது. காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது. இந்த நிலைமை இருப்பதால், நீங்கள் அல்லவா அமைச்சர்களுக்குச் சொல்லவேண்டும். நீங்கள் தயங்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். முன்பெல்லாம் சட்டப்பேரவை கூடுவது 8½ மணிக்கு என்று இருந்தது. 8½ மணி என்று இருந்ததை, அவகாசம் வேண்டுமென்று சொல்லி 9 மணிக்கு என்று மாற்றி இருக்கிறோம். அப்படியிருந்தும் இப்படிச் செய்வது நல்லது அல்ல. தயவுசெய்து தாங்கள் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த நிகழ்ச்சியைப் பற்றி அமைச்சர்கள் உணர்வார்கள், சொல்லவேண்டிய அவசியம் இருக்காது. அப்படிப்பட்ட நிகழ்ச்சி இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு உறுதி அளித்திருக்கிறேன். இந்த உறுதியை ஏற்றுக்கொண்டு கனம் உறுப்பினர் அமைதி கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.